மாண்புமிகு உறுப்பினர் என்ன கோருகின்றாரோ அதைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கும் என்று சொன்னால், அதனை அரசு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

205—

பேருந்து வசதி

***4396—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சாப்பர்த்தி ஊராட்சி, பந்தேரி கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சாப்பர்த்தி ஊராட்சி, பந்தேரி கிராமத்திற்குப் பேருந்து இயக்குவதற்கான வாய்ப்பு தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாப்பர்த்தி பஞ்சாயத்திற்குட்பட்ட பந்தேரி கிராமத்தின் சுற்றுப் பகுதியில் பனகமுட்லு, கோவில் கொட்டாய், எம்.ஜி.ஆர். நகர், முத்தூரரான் கொட்டாய் ஆகிய கிராமங்கள் உள்ளன. இந்த 4 கிராமங்களிலும் சுமார் 300 குடும்பங்கள் வசிக்கின்றன. பேருந்து நிறுத்தத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், சாப்பர்த்திக்கு சென்று 2 கிலோ மீட்டருக்கு மேலாக நடந்து சென்று அந்தப் பேருந்து நிறுத்தத்தை அடைய*

2022 ஏப்ரல் 29]

வேண்டியிருக்கிறது. பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்கள், பொது மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றார்கள். தடம் எண்கள் 40, 55– கிருஷ்ணகிரியிலிருந்து கருத்தமாரம்பட்டிக்குச் செல்கிறது. மேலும் தடம் எண் 13A, காலை 8–15 மணிக்கும், மாலை 6–15 மணிக்கும் கருத்தமாரம்பட்டிக்குச் செல்கிறது. இந்த 3 தடங்களில் செல்கின்ற அந்தப் பேருந்துகளில் ஏதேனும் ஒரு பேருந்தை பந்தேரிக்கு நீட்டித்துத் தர வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாப்பர்த்தி கிராமத்திற்கு சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பாக கிருஷ்ணகிரி கிளையின் தடம் எண் K 13A மற்றும் K 42 ஆகிய இரண்டு பேருந்துகள்மூலம் 15 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் வசதிக்காக இயக்கப்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பந்தேரி கிராமம் என்பது சாப்பர்த்தி கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அந்தச் சாலை மிகக் குறுகலாக இருக்கிறது; கனரகப் பேருந்துகளை இயக்க இயலாத நிலையில் இருக்கிறது. எதிரே ஒரு வாகனம் வந்தால், அந்த வாகனம் ஒதுங்கிச் செல்வதற்குச் சிரமமாக இருக்கும் என்ற காரணத்தினால், அந்த வழித்தடத்தில் தற்போது பேருந்து இயக்க இயலாத நிலை இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் அந்தச் சாலை சீர் செய்யப்படும் என்கிற உறுதியை இங்கே அளிக்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலிருந்து குருபரப்பள்ளி செல்லும் வழியில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பட உள்ளதாலும், Katerra, Mylan, Delta, *மற்றும்* Shahi *போன்ற*

ஏற்றுமதி தொழில் நிறுவனங்கள் வரவுள்ளதாலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 2,000–க்கும் மேற்பட்ட புற நோயாளிகள் வருகின்ற காரணத்தினாலும், தொழிற்சாலைகளில் 7,000–க்கும் மேற்பட்டவர்கள் பணியமர்த்தப்படவுள்ளதாலும், கிருஷ்ணகிரியிலிருந்து குருபரப்பள்ளி வரை புதிய நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் நிதியை ஒதுக்கி, அந்தச் சாலையைச் சீர் செய்த பிறகு, அதனை அதிகாரிகள்மூலம் பார்வையிடச் செய்து, பேருந்து இயக்குவதற்கான வாய்ப்பு இருப்பின், பேருந்து இயக்கப்படும்.

அதுபோல, மக்கள் அதிக எண்ணிக்கையில் வந்து செல்லக்கூடிய வாய்ப்பு இருப்பதால் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனை எழுத்துபூர்வமாகக் கொடுத்தால் அதிகாரிகள் வாயிலாகப் பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மக்கள் பயன்பெற வேண்டுமென முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மினி பேருந்துத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, நகரத்தையொட்டியுள்ள அத்தனை கிராமங்களிலும் மினி பேருந்து வசதிகள் செய்யப்பட்டன; தனியாருக்கு வழங்கப்பட்டன. ஆனால், தற்போது தனியார் பேருந்துகள் இயங்க முடியாத நிலை இருக்கிறது. Diesel விலை உயர்வு மற்றும் பயணிகளுடைய எண்ணிக்கை குறைவால் அவர்களால் பல இடங்களில் அந்தப் பேருந்துகள் இயக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பேருந்துகளின்

2022 ஏப்ரல் 29]

வழித்தடத்தை 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீட்டித்துத் தந்தால், அவர்களால் அப்பேருந்துகளை இயக்க முடியும். மினி பேருந்துத் திட்டம் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்த திட்டம். அந்தப் பேருந்துகளை இயக்க முடியாமல் தனியார் உரிமையாளர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனை அரசு கவனத்தில் கொண்டு, பேருந்துகளின் வழித்தடத்தை 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீட்டித்துத் தந்து, தமிழ்நாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற அத்தனை மினி பேருந்துகளும் இயக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, கொண்டுவரப்பட்ட புரட்சிகரமான திட்டம், மினி பேருந்துத் திட்டம். பேருந்துகளையே பார்க்காத கிராமங்களுக்கு மினி பேருந்துத் திட்டம்தான் வரப்பிரசாதமாக அமைந்தது. கடந்த 10 ஆண்டுக் கால ஆட்சியில் அப்பேருந்துகளின் உரிமையாளர்கள் பல்வேறு கோரிக்கைகள் வைத்தும் கவனிக்கப்படாமல் இருந்ததென்று, மினி பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக கடந்த வாரத்தில் எங்களைச் சந்தித்துப் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடர் முடிந்த பிறகு, அந்தச் சங்கத்தாரோடு பேச்சுவார்த்தை நடத்தி, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக ஏற்கெனவே சட்டமன்றத்தில் நான் பதிவு செய்திருக்கிறேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பெரிய பேருந்து உரிமையாளர் என்பதை அறிவோம். மினி பேருந்துக்காகவும் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினரோடு பேச்சுவார்த்தை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாபநாசம் தொகுதியில் ஐயம்பேட்டையிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில்*

வையச்சேரி ஊராட்சி இருக்கிறது. வையச்சேரி ஊராட்சியில் பூக்குடி, புண்ணியநல்லூர், கோனூர் உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன. நாடு விடுதலை பெற்றதிலிருந்து இந்தக் கிராமங்கள் அரசுப் பேருந்துகளைப் பார்த்ததில்லை. மினி பேருந்துகள் அங்கே இயக்கப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்றுமுன் குறிப்பிட்டதைப்போல, 11 ஆண்டுகளுக்கு முன்பு அந்த மினி பேருந்துகள் நிறுத்தப்பட்டன. வையச்சேரி ஊராட்சியிலிருந்து பள்ளிக்கூட மாணவர்கள் 5 கிலோ மீட்டர் தூரம் cycle மூலமாகவோ அல்லது நடந்தோதான் ஐயம்பேட்டையிலுள்ள பள்ளிக்கூடத்திற்குச் செல்லக்கூடிய நிலையிருக்கிறது. இந்தச் சூழலைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, தஞ்சாவூரிலிருந்து தொடர் வழியாகவோ அல்லது ஐயம்பேட்டை—சூளமங்கலம் வழியாகவோ வையச்சேரி ஊராட்சிக்கு அரசுப் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதையும், நின்றுபோன மினி பேருந்து இயக்கத்தையும் தொடங்குவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மினி பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள், அவர்களுடைய பாபநாசம் தொகுதிக்குட்பட்ட மாணவர்களுடைய பிரச்சினையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டு அளவில் மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கின்ற சூழ்நிலையில், மாணவர்களின் போக்குவரத்து வசதிக்காகக் கூடுதல் பேருந்துகள் தேவைப்படுகின்றன என்கின்ற கோரிக்கை பல்வேறு தரப்புகளிலிருந்து எழுந்து வருகின்றது. அதுகுறித்துப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனது மயிலம் சட்டமன்றத் தொகுதியில், ரெட்டணை—சென்னை பேருந்து இயங்கிக் கொண்டிருந்தது;

2022 ஏப்ரல் 29]

தற்போது அப்பேருந்து நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே அப்பேருந்து இயக்கம் தொடரப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து எப்பொழுது துவக்கப்பட்டது, எப்பொழுது நிறுத்தப்பட்டது என்பதை விவரமாகக் கூறியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்ட பல்வேறு பேருந்துகள் கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டிருப்பதாகப் பல்வேறு உறுப்பினர்கள் தொடர்ந்து கூறிவருகிறார்கள். அதுகுறித்துப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதியில் கொள்ளிடக்கரையையொட்டி இருக்கிற தில்லைநாயகபுரம், எய்யலூர், ராயங்குடி, கஞ்சங்கொல்லி உள்ளிட்ட பல்வேறு கிராமங்கள் காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியை நம்பி இருக்கின்றன. இவற்றுக்கிடையிலான போக்குவரத்து வழித்தடங்கள் கடந்த காலங்களில் ஒட்டுமொத்தமாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவ்வாறு சென்ற 10 ஆண்டுகளாக நிறுத்தப்பட்ட அத்தகைய வழித்தடங்களுக்குப் புத்துயிரூட்டி மீண்டும் அவற்றைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதையும், திருமுட்டத்திலிருந்து ஓர் இரவு நேரப் பேருந்து சென்னைக்கு வர வேண்டும் என்கின்ற கோரிக்கையையும் கனிவுடன் பரிசீலிப்பார்களா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சிந்தனை செல்வன் அவர்கள் எழுத்துவடிவமாகக் கொடுத்தால் அந்த வழித்தடங்கள் குறித்து அரசு பரிசீலிக்கும். திருமுட்டத்திற்கு அருகிலுள்ள விருத்தாசலத்திலிருந்து சென்னைக்கு அதிக அளவிலான பேருந்துகள் இரவு நேரத்தில் பயணிக்கின்றன, விருத்தாசலம்–திருமுட்டத்திற்கு இடையிலும் அதிக அளவிலான பேருந்துகள் இருக்கின்றன. இணைப்பு வசதிகள் இருக்கும். (குறுக்கீடு) நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியைச் சார்ந்தவர் என்பதால், அந்தக் கருத்தைக் கூறுகிறார். ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் பகுதியிலிருந்து அதிக அளவிலான பேருந்துகள் அந்த வழியாகப் பயணிக்கின்றன. தேவைப்படின் திருமுட்டத்திற்கு அந்தப் பேருந்து இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதியிலுள்ள அனைத்துப் பேருந்துகளும் சரியான நேரத்திற்கு, சரியான வழித்தடங்களில் செல்வதில்லை. இதனால் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவியர், விவசாயக் கூலிகள் பெரிதும் அவதிக்குள்ளாகின்றார்கள். மேலும் சாலைகள் சரியில்லை, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், எந்தப் பேருந்து, எந்த வழித்தடத்தில் சரியான நேரத்திற்கு வருவதில்லை என்பதை மட்டும் குறிப்பிட்டு ஒரு கேள்வியாகக் கேளுங்கள். இவ்வாறு பொத்தாம்பொதுவாகச் சொல்லக் கூடாது.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், எந்தப் பேருந்து எந்த இடத்திற்கு, எந்த நேரத்திற்கு வரவேண்டும் என்பதை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவி செய்வார்கள்.

2022 ஏப்ரல் 29]

திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலுக்குவார்பட்டி ஊராட்சி, நிலக்கோட்டை பேரூராட்சியில் வத்தலகுண்டு வழியாக இயங்கி வருகின்ற பேருந்துகள், குன்னுவாரன்கோட்டை வழியாக இயக்கப்படும் பேருந்துகள் அனைத்துமே சாலைகள் சரியாக இல்லையென்ற காரணத்தினாலும், சரியான வருமானம் வரவில்லை என்கின்ற காரணத்தாலும் இந்தப் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி வரும்போது, அந்தச் சாலைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.*

திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே மக்களின் நலன் கருதி, சரியான நேரத்தில் சரியான வழித்தடத்தில் பேருந்துகள் செல்வதற்கு அரசு வழிவகை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய நிலக்கோட்டை தொகுதியில் எந்தெந்தப் பேருந்துகள் சரியான நேரத்தில் வழித்தடங்களில் வருவதில்லை என்பதை அவர் எழுத்துப்பூர்வமாகக் கொடுப்பாரேயானால், அதுகுறித்து உரிய அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

206—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***14477—திரு. P.R.G. அருண்குமார்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—